
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
ஜென்னும் திருவாசகமும்...
பாகம் 2
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் திருவாசகமும்

## பாகம் 2

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

1. தவம் செய்தேன்
2. உயிர் இரக்கம்
3. முக்திக்கு செல்லும் பாதை எது?
4. அறிவனோ அல்லனோ
5. இன்பம் பெருக்கி இருள்அகற்றி
6. பற்றைவிட வேண்டும்
7. முக்திநெறி அறியாத மூர்க்ரோடு
8. கருணைக் கடலின் உள்ளம்
9. யானே பொய் என் நெஞ்சும் பொய்
10. பழுக்கும் ஞானம்
11. ஞானத்தின் நிலைகள்
12. அபரஞானம் பரஞானமாக மாறிவிட்டது
13. ஞானம் யாரிடம் பெறுவது?
14. சீடனும் குருவும்
15. வழியும் கோப்பை
16. பிறப்பு அறுக்கும் பேராளன்

17. மனத்திண்மை (வில் பவர்)

18. மனத்தூய்மை வேண்டும்

19. கூற்றவன் சீற்றம் அஞ்சேன்

20. ஆணவம் நீங்கிய அமைச்சர்

21. பழக்கமே பற்றாக!

22. மனம் ஒரு பொக்கிஷம்

23. தவமே புரிந்திலன்

24 .ஞானியின் ஆசை என்ன?

25. முழு விழிப்புணர்ச்சி!

26. வாழ்ந்தார்கள் ஆவாரும்

27. இன்னும் செத்திலேன்

28. ஜென்னும் திருவாசகமும் பாகம்

# 1. தவம் செய்தேன்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஊரில் புகழ்பெற்ற துறவி ஒருவர் இருந்தார். அவரிடம் நிறைய மாணவர்கள் இருக்கின்றனர்.

ஒரு நாள் அவரைப் பார்க்க துறவியின் பழைய மாணவன் ஒருவன் பார்க்க வந்தான்.

அவரைப் பார்த்து எல்லாம் பேசிய பின்னர், குருவிடம் “எனக்கு ஒரு குழப்பம்” என்று சொன்னான்.

குருவும், “என்ன?” என்று கேட்டார்.

அதற்கு மாணவன், “நான் உங்களிடம் படித்த தியானத்தை சரியாக கடைபிடிக்கிறேன். அவை எனக்கு மன அமைதியையும், அறிவுக் கூர்மையையும் தருகின்றன. அதை நன்கு என்னால் உணர முடிகிறது” என்று சொன்னான்.

“சந்தோஷம். இதில் என்ன குழப்பம்?” என்று குரு கேட்டார்.

அதற்கு மாணவன் “நான் தியானம் செய்யும் நேரங்களில் நல்லவனாக இருக்கிறேன். ஆனால் மற்ற நேரங்களில் நல்லவனாக இருக்கிறேனா? என்ற சந்தேகம் இருக்கிறது.

எனக்கே சில சமயங்களில் தவறுகளை செய்கிறேன் என்றும் தெரிகிறது. தியானம் செய்யும் ஒருவன் இப்படி செய்வது சரிதானா? இதை நினைக்கும் போது என் உள்ளம் கஷ்டமாக இருக்கிறது” என்று கூறினான்.

குரு அதற்கு சிரித்துவிட்டு, “ஆகவே நீ தியானமும் செய்கிறாய், தவறுகளும் செய்கிறாய், அப்படித்தானே...?” என்று கேட்டார். அதற்கு அவனும் “ஆமாம், அது தவறில்லையா? என்று கேட்டான்.

குரு அதற்கு ‘இல்லை. நீ தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், கொஞ்ச நாளில் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று நின்றுவிடும்!' என்று கூறினார்.

உடனே அந்த மாணவன் “ஒரு வேளை என் தியானம் நின்றுவிட்டால்?” என்று வினவினான். குரு “அதுவும் நல்லது தான். அப்போது தான் உன் உண்மையான இயல்பு உனக்கு புரியும்” என்று கூறினார்.

“நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம் புகுந்துஅடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே”
(திருவா.பா.555)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 2.உயிர் இரக்கம்

## (ஜென்னும் திருவாசகமும்)

சீன நாட்டு ஜென் ஞானியருள் சிறந்தவராக விளங்கியவர் சுவாங்சே அவர்கள். அவருக்கு எண்ணற்ற சீடர்கள் இருந்தார்கள்.

முதுமையால் தளர்ச்சி அடைந்த அவர் மரணப் படுக்கையில் கிடந்தார்.

அவரைச் சோதித்த மருத்துவர்கள் அவரைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

குருவை எப்படிச் சிறப்பாக அடக்கம் செய்வது என்று சீடர்கள் பேசத் தொடங்கினார்கள்.

அவர்கள் இப்படி வாதிடுவதைக் கேட்டுக் கண் விழித்தார் அவர். மெல்லிய குரலில் சீடர்களை அழைத்தார்.

சீடர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

“என் பிணத்தை அடக்கம் செய்வதற்காக ஏன் இப்படிக் குழம்பிக் கொள்கிறீர்கள்? பரந்த பூமியும் விரிந்த வானமும் எல்லோர்க்கும் வாய்த்த சவப் பெட்டி. என் பிணத்தைப் பரந்த வெளியில் எங்காவது போட்டுவிட்டுச் செல்லுங்கள். அதுதான் இயற்கை முறை. இதை விட்டுவிட்டு ஆடம்பரமாக ஊர்வலம் நடத்தி என்னை அடக்கம் செய்வதை நான் விரும்பவில்லை” என்றார்.

இதைக் கேட்ட சீடர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

அவர்களில் ஒருவன் பணிவுடன் “குருவே! தாங்கள் சொன்னபடி செய்தால் தங்கள் உடலைக் கழுகுகள் கொத்தித் தின்னுமே” என்றான்.

பூமிக்கு மேலே கிடந்தால் கழுகுகள் கொத்தி தின்னும் கீழே கிடந்தால் கரையான்கள் மெல்ல அரித்துத் தின்னும். எப்படியானால் என்ன? கழுகுக்கு உதவி செய்யக் கூடாது. கரையான்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?” என்று கேட்டார்.

இறைவனிடம் அன்பை வேண்டும் நாமும் உயிர்களிடம் அன்பு காட்ட வேண்டுமல்லவா?

“அருளா அமுதப் பெருங்கடல்வாய்
அடியார் எல்லாம் புக்கு அழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்துஓர் உன்மத்தன்
வரமால் என்றுஇங்கு எனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்அன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே” (திருவா.பா.487)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

.

# 3.முக்திக்கு செல்லும் பாதை எது?

## (ஜென்னும் திருவாசகமும்)

சீடன் ஜென் குருவிடம் கேட்டான், “எல்லாப் பாதைகளும் புத்தரின் ராஜ்ஜியத்துக்குத்தான் போய்ச் சேரும்.



ஆனால், ஒரு குறிப்பிட்ட பாதை முக்தியின் வாசலுக்கே நேரடியாக அழைத்துச் செல்லும் என்று சொன்னீர்களே, அந்தப் பாதை எங்கே துவங்குகிறது?”

ஜென் குரு, சீடன் நின்ற இடத்தைச் சுட்டிக்காட்டி, “இங்கே...” என்றார்.

“முக்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட
அந்திக்கு அருவி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதிந்த பரஞ்சோதி
தித்திக்கு மாபடித் தெள்ளேணம் கொட்டாமோ” (திருவா.பா.246)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 4.அறிவனோ அல்லனோ

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஊரில் ஜென் துறவி ஒருவர் மடாலயத்தில் வாழ்ந்து வந்தார். அதே ஊரில் மடாலயத்திற்கு அருகில் கண்பார்வை இல்லாத ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவன் எப்போதும் கடவுளை வணங்கும் போது “கடவுளே! என்னை இப்படி கண்பார்வை இல்லாமல் படைத்துவிட்டாயே. உனக்கு கண்ணே இல்லையா?” என்று புலம்பி கொண்டே இருந்தார்.

அப்போது ஜென் குரு அவரது பிரார்த்தனையை கேட்டு, அவனை காணச் சென்றார்.

பின் அவனிடம் “இப்போது கடவுள் உன் முன் வந்து, உன்னிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், என்ன கேட்பாய்? அதுவும் ஒரே ஒரு வரம் தான் கொடுப்பேன் என்று கேட்டால், என்ன கேட்பாய்?” என்று கேட்டார்.

அதற்கு அவன் சிறிது நேரம் யோசித்து, பின் அவரிடம் “ஒரு பெரிய ராஜ மாளிகையில், எனது மனைவி என் மகனுக்கு வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டுவதை, எனது வீட்டின் ஐந்தாவது மாடியிலிருந்து பார்த்து சந்தோஷப்பட வேண்டும்” என்று கேட்பேன்.

அதைக் கேட்ட குருவிற்கு அவனது புத்திசாலித்தனமான பதிலைப் பார்த்து, “நீ வாழ்க்கையில் உன் புத்திசாலித்தனத்தால் விரைவில் முன்னேறிவிடுவாய்” என்று சொல்லி தன்னுடைய சீடனாக வைத்துக் கொண்டார்.

அவன் ஒரே வரத்தில் தனக்கு பார்வை வேண்டும், பெரிய ஐந்து மாடி மாளிகை வேண்டும், பெரிய பணக்காரனாக இருக்க வேண்டும் என்று கேட்டுவிட்டான்.

## அறிவின் உடையவனா? – திருவாசகம்

“அறிவனே அமுதனே அடிநா யினேன்
அறிவ னாகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவிலாமை அன்றே கண்டது ஆண்டநான்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே” (திருவா.பா.54)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5. இன்பம் பெருக்கி இருள்அகற்றி

## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குரு தன் மாணவர்களுக்கு சொன்ன கதைகளில் இதுவும் ஒன்று.

ஒருமுறை அவர் தன்னம்பிக்கை பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியே ஒரு ஏறும்பு உணவுப் பொருளைத் தூக்கியபடி சென்று கொண்டிருந்தது.

அதை மாணவர்களுக்குக் காட்டினார் குரு.

அனைத்து மாணவர்களும் எறும்பின் செயலையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

எறும்பு செல்லும் வழியில் ஒரு சிறிய விரிசல் இருந்தது. அதை எப்படித் தாண்டிச் செல்வது என்று சிறிது நேரம் நின்ற ஏறும்பு உடனே தான் கொண்டு வந்த உணவுப் பொருளை அந்த விரிசலின் மீது வைத்தது.

பின்னர் அதன்மீது ஏறி மறு பக்கம் சென்றது. மீண்டும் உணவுப் பொருளை இழுத்துச் செல்லத் தொடங்கியது.

“நமக்கு ஏற்படும் துன்பத்தையே பாலமாக வைத்து நாமும் முன்னேற முடியும்” என்று விளக்கினார் குரு.

“இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதியாய் – அன்பு அமைத்துச்”
(திருவா.பா.627)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 6. பற்றைவிட வேண்டும்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குருவிடம் ஒரு சீடர், நான் உங்களுக்காக ஒன்றும் கொண்டு வரவில்லை என்பதில் வருத்தம்" என்றார்.

ஆச்சார்யார்.. "அதை எறிந்துவிடு."


மாணவர் நான் ஒன்றும் கொண்டு வராதபோது எதை எறிவது?

ஆச்சார்யார். "அப்படியானால் அதைக் கொண்டு போய்விடு."

சீடர் உருவங்களின் மீது பற்றைவிட வேண்டும் என்பது ஆச்சாரியரின் எண்ணம்.

"உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்து உருக வேண்டுவனே."
(திருவா.பா.558)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




# 7. முக்திநெறி அறியாத மூர்க்ரோடு
## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு நாள், ஒரு ஜென் துறவியைப் பார்க்க ஒரு சாமுராய் வந்து இருந்தார்.

நான் சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி அறிய விரும்புகிறேன்," என்று சாமுராய் அந்த ஜென் துறவியிடம் கூறினார். இவைகள் உண்மையில் இருக்கிறதா என்றும் கேட்டார்.

அந்த ஜென் துறவி அவரைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

“நான் ஒரு சாமுராய்” என்று பெருமைமிக்க அந்த போர்வீரன் சொன்னார்.

உடனே அந்த ஜென் துறவி,

“ஹா!. இதுபோன்ற நுண்ணறிவுள்ள விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்று நீங்கள் நினைப்பது எப்படி?

நீங்கள் ஒரு கொடூரமான, மிருகத்தனமான போர்வீரன்!

உங்கள் முட்டாள்தனமான கேள்விகளால் என் நேரத்தை வீணாக்காதீர்கள், “என்று அந்த துறவி கூறி, சாமுராயை தன் இடத்தை விட்டு விரட்ட தன் கையை அசைத்தார்.

கோபமடைந்த சாமுராய் துறவியின் அவமானங்களை தாங்கி கொள்ள முடியாமல். தன் வாளை எடுத்து அவரைக் கொலை செய்ய ஓங்கினார்.

“உடனே, இது நரகம் என்று அந்த துறவி அமைதியாக பதில் அளித்தார்”.

சாமுராய் அதிர்ச்சியடைந்தார். அவன் முகம் மென்மையாகிவிட்டது. அந்த ஜென் துறவியின் ஞானத்தால் தாழ்த்தப்பட்ட அவர், தனது வாளை விலக்கி அவர் முன் வணங்கினார்.

அப்பொழுது ,

“இது சொர்க்கம்,” என்று ஜென் துறவி அமைதியாக கூறினார்.

“முக்திநெறி அறியாத மூர்க்ரோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்டு
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.”
(திருவா.பா.650)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8. கருணைக் கடலின்உள்ளம்

(ஜென்னும் திருவாசகமும்)

குருகுல பாடம் முடிந்து ஊர் சென்ற சீடன் ஒருவன் மீண்டும் குருவிடம் வந்து தயங்கியவாறே " குருவே தங்களிடம் நான் படித்ததெல்லாம் மறந்து விட்டது மீண்டும் அந்தப் பாடங்களை சொல்லிக் கொடுப்பீர்களா?" எனக் கேட்டான்.

"இதற்காகவா இத்துணை தயக்கம். உட்கார் சொல்லித் தருகிறேன்" என்ற குரு சீடனுக்கு முதலில் இருந்து பாடங்களை சொல்லித் தந்தார்.

"நன்றி குருவே பாடங்கள் நன்கு விளங்கிவிட்டன சென்று வருகிறேன்" எனக் கிளம்பினான் சீடன்.



ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் குருவிடம் வந்து "சுவாமி எனக்கு மீண்டும் பாடங்கள் மறந்து போய்விட்டன சொல்லித் தருவீர்களா?" எனக் கேட்கிறான்.

புன்னகைத்த குரு “அதனாலென்ன போதிக்கிறேன்” எனக் கூறி போதனையை ஆரம்பித்தார். சில நாட்களுக்குப் பின் நன்றி கூறி விடை பெற்றான் சீடன்.

அவன் போனதும் மூத்த சீடன் ஒருவன் “குருவே அவன் மீண்டும் மீண்டும் வருகிறான். நீங்கள் சொல்லித் தந்து கொண்டே இருக்கிறீர்களே இது முறையா? முட்டாளான அவனால் கிரகிக்க முடியவில்லை என்றால் அவனை வரவேண்டாம் என்று சொல்ல வேண்டியதுதானே?” என்றான்.

தரிசு பூமியாக இருந்தாலும் அந்த இடத்தைப் பதப்படுத்தி தண்ணீர் ஊற்றினால் விரைவில் விளை நிலமாக மாறிவிடும் அல்லவா?

அது போலத்தான் அவனும். அவன் பதப்படும் வரை சொல்லி கொடுக்க வேண்டியது ஆசானாகிய எனது கடமை” என குரு சொல்ல, குருவின் மேன்மையை உணர்ந்தான் மூத்த சீடன்.

“ கடலினுள் நாய்நக்கி ஆங்குஉன்
 கருணைக் கடலின்உள்ளம்....” (திருவா.பா.117)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 9.யானே பொய் என் நெஞ்சும் பொய்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஊரில் ஹோகென் எனும் ஜென் மாஸ்டர் கோவிலில் வசித்து வந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த நான்கு துறவிகள் ஹோகெனிடம், ஒரு நாள் இரவு தங்குவதற்கு அனுமதி கேட்டனர். அவரும் அனுமதி வழங்கினார்.

அன்று இரவு கடும் குளிராக இருந்தது. எனவே, கோயிலுக்கு வெளியில் தீயை மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென அவர்களுக்குள் ஒரு விவாதம் ஏற்பட்டது. அது "அக உண்மை பெரிதா?, புற உண்மை பெரிதா?" என்பதுதான்.



இதனிடையே, துறவிகள் வெகு நேரமாகியும் வராததால், ஹொகென் மாஸ்டர் அவர்களை தேடி வெளியில் வந்தார்.

அப்போது அவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தை பார்த்து அருகில் வந்தார். துறவிகள் நால்வரும் "அக உண்மை மற்றும் புற உண்மை" பற்றி விவாதித்து கொண்டிருந்ததை கண்டார்.

அப்போது அவர் "அங்கே ஒரு பெரிய கல் இருக்கிறது. அதன் உண்மையான நிலை பற்றியது, உங்கள் புத்தியின் உள்ளே இருக்கிறதா அல்லது வெளியே இருக்கிறதா?" என்று கேட்டார்.

அந்த நால்வரில் ஒருவர் "அந்த கல்லின் உண்மை என் புத்தியின் உள்ளே இருக்கிறது ஏனெனில் புத்தமதத்தின் படி ஒவ்வொரு பொருளும், ஒருவரின் மனதின் உள்ளே பொருளாக்கப்படுகிறது," என்றார்.

அதற்கு ஹோகென் "அப்படியென்றால் அந்த கல்லின் பாரத்தை உன் புத்தி உணர வேண்டுமே!" என்றார்.

ஆகவே "எந்த ஒரு பொருளைப் பற்றி சொன்னாலும் அதைப்பற்றி, அதன் தன்மைகளைப் பற்றி நம் மனதில் பதிந்து ஒரு எண்ணம் இருக்கும்.

எனவே, புற உண்மையை அக உண்மை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பது புத்தமதத்தின் கருத்தாக இருக்கிறது.

“யானே பொய் என் நெஞ்சும் பொய்
    என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
  உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
  தெளிவே தித்திக்கும் மானே
அருளாய் அடியேன்
  உனைவந்து உறுமாறே”  (திருவா.திருச்சதகம்)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 10. பழுக்கும் ஞானம்
### (ஜென்னும் திருவாசகமும்

போதி தர்மர் தன் வாரிசைத் தேர்ந்தெடுத்தல்.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, போதிதர்மர்- மீண்டும் இந்தியாவுக்கு வந்தபோது, ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய சீடர்களாகி விட்டனர்.

அவர்களில் நான்கு பேரை இறுதி சோதனைக்கு அவர் தேர்ந்தெடுத்திருந்தார்.

ஏனென்றால் -அந்த நான்கு பேரில் ஒருவர் சீனாவில் தனது பணியைத் தொடர அவரது வாரிசாக தேர்வு செய்யப்படுவார்.

ஆயிரக்கணக்கான சீடர்கள் அங்கே அமர்ந்திருந்தாலும் பெரும் மௌனம் மட்டுமே அங்கு இருந்தது.

அந்த நான்கு பேரும் அதற்கு தகுதியானவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆனால் யார் மிகவும் தகுதியானவர்கள் என்று சொல்வது மிகவும் கடினம்.

போதிதர்மர் - முதல் மனிதரிடம், “ஞானத்தின் சாரத்தைச் சொல்லுங்கள்?” என்று கேட்டார்.

அந்த மனிதன், “ஞானத்தின் சாராம்சம் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது” என்றார்.

போதிதர்மர், “உங்களிடம் என் சதை இருக்கிறது, ஆனால் சதை மிகவும் ஆழமாக இல்லை. நீங்கள் என் வாரிசாகத் தேர்வு செய்யப்படவில்லை.

நீங்கள் கூறியது சத்தியத்தின் தொலை தூர எதிரொலியைக் கொண்டுள்ளது, ஆனால் அது ஒரு எதிரொலியாகும்.”

போதிதர்மர் - இரண்டாவது சீடரிடம், “நீங்கள் சொல்லுங்கள் ஞானத்தின் சாராம்சம் என்ன?” என்று கேட்டார்.

அவர் கூறினார், “ஞானத்தின் சாராம்சம் தியானம், முற்றிலும் அமைதியாக இருப்பது.”

போதிதர்மர், “உங்களிடம் என் எலும்புகள் உள்ளன, ஆனால் நீங்கள் என்னிடம் இல்லை. நீங்கள் என் வாரிசாக இருக்க முடியாது.”

போதிதர்மர்- மூன்றாவது மனிதனிடம் திரும்பி, அதே கேள்வியைக் கேட்டார், “ஞானத்தின் சாராம்சம் என்ன?”

மூன்றாவது நபர், “ஞானத்தின் சாராம்சம் என்னவென்றால், உங்கள் திறனை அதன் இறுதி உண்மைக்கு கொண்டு வருவதும், மலருவதும், உங்கள் இருப்புக்கு பூக்களைக் கொண்டு வருவதும் ஆகும்.”

போதிதர்மர், “உங்களிடம் என் மஜ்ஜை இருக்கிறது, ஆனால் இன்னும் நீங்கள் என் வாரிசாக இருக்க முடியாது. நீங்கள் மிகவும் நெருக்கமாக இருக்கிறீர்கள், ஆனால் நெருக்கம் கூட ஒரு தூரம்.”

போதிதர்மர், நான்காவது மனிதரிடம் திரும்பினார், அதே கேள்வியைக் கேட்டார். நான்காவது மனிதனின் கண்களில் கண்ணீர் இருந்தது, அவர் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் போதி தர்மாவின் காலடியில் சரிந்தார்.

போதிதர்மர், “உங்கள் மௌனம் எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அது புரியாது. உங்கள் அனுபவத்தை வார்த்தைகளாக கொண்டு வர வேண்டும். சொல்!”

கண்ணீருடன் அந்த மனிதன், “எனக்குத் தெரியாது” என்றார்.

மேலும் போதிதர்மர், “நீங்கள் என் வாரிசாகப் போகிறீர்கள், ஏனென்றால்‘ எனக்குத் தெரியாது என்று சொல்லக்கூடிய நபர் ஏற்கனவே ஞான ஆலயத்தின் வாசலை அடைந்துவிட்டார்.




அவர் ஏற்கனவே வாசலில் நிற்கிறார். அவரது அப்பாவித்தனம், அவர் அறியாதது, தெரிந்து கொள்வதற்கான ஆரம்பம்.”

ஒரு உண்மையான குரு உலகம் முழுவதையும் கண்டிக்கப் போகிறார்,

அவர் உங்களுக்கு எதையும் கொடுக்கவில்லை மாறாக, அவர் உங்களிடமிருந்து பொருட்களை எடுத்துச் செல்கிறார்.

ஒரு குழந்தையைப் போன்ற அப்பாவித்தனமான நிலையில் அவர் உங்களை முற்றிலும் நிர்வாணமாக விட்டு விடுகிறார்.

அங்கிருந்துதான் உங்கள் உண்மையான வளர்ச்சி தொடங்குகிறது. அங்கிருந்துதான் உண்மையான ஆரம்பம்.

ஞானத்தை விட பெரியது எது? ஞானத்தை விட அப்பாவித்தனம் பெரியது, ஏனென்றால் ஞானம் என்பது வெற்று வார்த்தைகளின் தொகுப்பு மட்டுமே.

அப்பாவித்தனம் என்பது உங்கள் முழு இருப்பின் மாற்றமாகும், நீங்கள் எல்லா தூசுகளையும் சுத்தம் செய்வது போல நீங்கள் ஒரு குளியல் எடுத்து விட்டீர்கள்.

அப்பாவித்தனத்தின் புத்துணர்ச்சி, அப்பாவித்தனத்தின் இளமை, மெதுவாக மெதுவாக ஆழமடைந்து, உங்கள் அழியாத தன்மையைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துகிறது. (ஓஷோ)

நான்காவது சீடனுக்கு பழுத்த ஞானம் கிடைத்தது. எப்படி? திருவாசகம் விடை சொல்கிறது.

“அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.” (திருவா.பா.502)


திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. ஞானத்தின் நிலைகள்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு இளம் துறவி ஞானத்தில் முதிர்ந்து விட்டதாக குரு அறிவித்தார்.

இதைக் கேட்ட துறவிகளில் சிலர் அந்த இளம் துறவியைப் பார்க்க விரும்பினர்.



அவரை சந்தித்து நீங்கள் சிறந்த ஞானம் அடைந்து விட்டீர்கள் என்று கேள்விப்பட்டோமே, அது உண்மையா என்று கேட்டனர்.

ஆமாம் என்று அவர் கூற, தற்போது எப்படி உணர்கிறீர்கள் என்று பதிலுக்கு அவர்கள் கேட்டனர்.

எப்பொழுதும் போல் கஷ்டமாகத் தான் உணர்கிறேன் என்றார்.

ஞானத்தின் நிலைகள் – திருவாசகம்

"கேட்டாரும் அறியாதான் கேடுஒன்று இல்லான்
　கிளைஇலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்துஇருப்ப ஞாலத்து உள்ளே
　நாயினுக்குத் தவிசுஇட்டு நாயி னேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
　கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்
　எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே." (திரு.திருச்சசகம்.பா.32)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 12. அபரஞானம் பரஞானமாக மாறிவிட்டது

## (ஜென்னும் திருவாசகமும்)

அது ஒரு பெரிய குருகுலம். பல ஜென் துறவிகள் அங்கு தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர்.

குருகுலத்தில் இருந்த தலைமை குருவுக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார். அவரிடம் தலைமை சீடன் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் தனது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, அமைதியாக அமர்ந்திருந்தார், தலைமை சீடன்.

அப்போது தலைமை குரு, அவரை அழைப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து அவர், குருவின் அறையை நோக்கிச் சென்றார்.

அறைக்குள் குளிரை தாங்க முடியாமல், போர்வையால் போர்த்திய நிலையிலும் நடுங்கியபடி அமர்ந்திருந்தார் குரு. அவருக்கு எதிரில் விறகுகள் குவித்து, நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

தனது சீடனைப் பார்த்ததும், ‘உட்கார்’ என்று சைகை காட்டினார், குரு. தொடர்ந்து அவரும், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தார்.

குருவானவர் பேச்சைத் தொடர்ந்தார். ‘என்னை வயோதிகம் வாட்டி எடுக்கிறது. உடலில் தள்ளாமை ஏற்பட்டு விட்டது. என்னுடைய சீடர்களிலேயே நீ தான் முதன்மையானவன். எனவே எனக்குப் பிறகு, இந்த குருகுலத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை நீதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்’ என்றார் தலைமை குரு.

அதை ஏற்றுக்கொள்வது போல், தலைமை சீடன் அமைதியாக தலையாட்டினார். இதையடுத்து குரு தன் அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து சீடனிடம் நீட்டினார்.



‘இதை வாங்கிக்கொள். இது ஒரு அரிய பொக்கிஷம். உனக்கு இந்த புத்தகம் நல்வழியைக் காட்டும்’ என்று கூறி அதை வழங்கினார்.

ஆனால் தலைமை சீடனோ, அதை வாங்க மறுத்தார். ‘எனக்கு இது வேண்டாம் குருவே’.

தன் சீடன் இந்த புத்தகத்தின் வலிமை தெரியாமல் மறுக்கிறான் என்று நினைத்த குரு, மீண்டும் அவனிடம் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தலைமை சீடன், ‘இல்லை குருவே.. எனக்கு தேவையானதை யெல்லாம் தாங்கள் எப்போதோ கற்பித்து விட்டீர்கள். இது எதற்கு?’ என்று கூறி மீண்டும் மறுத்தார்.

ஆனால் குரு, ‘அப்படிச் சொல்லாதே. இது வேத நூல். பல தலைமுறைகளாக இந்த புத்தகம், நம்முடைய மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது’ என்றார்.

தலைமை சீடன் அப்போதும் குரு கொடுத்த புத்தகத்தை ஏற்கவில்லை.

உடனே குரு, தன்னுடைய சீடனைப் பார்த்து கேட்டார். ‘பசி வந்தால் உணவுக்கு என்ன செய்வாய்?’.

‘பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யாசகம் பெற புறப்படுவேன்’ என்றார் தலைமை சீடன்.

‘சரி.. ஒருவர் பிட்சையிடும்போது என்ன வேண்டும் என்று கேட்பாய்?’ என்று அடுத்த கேள்வியை முன் வைத்தார் குரு.

தலைமை சீடனோ, ‘எதுவும் கேட்கமாட்டேன். அவர்கள் இடுவதை

பெற்றுக் கொள்வேன்’ என்றார்.

‘அப்படி உன் பாத்திரத்தில் இடப்பட்ட பிட்சையாக இதை வைத்துக் கொள்’ என்று கூறி புத்தகத்தை நீட்டினார், அந்த மடத்தின் குரு.

மௌனமாக அந்த புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட தலைமை சீடன், அடுத்த நொடியே தன் கையில் இருந்த புத்தகத்தை அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டார்.

பதறிப்போனார் குரு. ‘அடப்பாவி என்ன காரியம் செய்து விட்டாய்?’ என்று அலறினார்.

இப்போதும் அமைதியாக பதிலளித்தார் தலைமை சீடன். ‘பிட்சை அளித்த யாருமே, தாங்கள் போட்ட பிச்சை என்ன ஆனது என்று பார்ப்பதில்லை குருவே.

அதுவும் இல்லாமல் ஞானம் என்பதே நெருப்புதானே. நெருப்பு நெருப்புடன் சேர்ந்துவிட்டது. வேதம் என்பது வெறும் எழுத்துக்கள். இவற்றிலா இருக்கிறது ஞானம்?’ என்றார் தலைமை சீடன்.

தன்னுடைய சீடன் தன்னை விடவும், பெரும் ஞானம் அடைந்தவன் என்பதை அந்த வார்த்தைகளில் இருந்து உணர்ந்து கொண்டார் குரு.

“வான நாடரும் அற ஒணாதநீ
    மறையில் ஈறும் முன்தொடர ஒணாத நீ
ஏனை நாடரும் தெரி ஒணாத நீ
    என்னை இன்னிதா ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆட வித்தவா
    உருகி நான் உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
    நைய வையகத்து உடைய இச்சையே”
(திருவாசகம்.திருச்சதகம்-ஆந்தாதீதம் – 99)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 13. ஞானம் யாரிடம் பெறுவது?
## (ஜென்னும் திருவாசகமும்)

ஞானதாகம், ஒரு பிரபுவுக்கு உண்டானது.

அதற்கான தெளிவைப் பெறவேண்டி....அவர் பலதரப்பட்ட மதங்கள், சடங்குகள், தத்துவங்கள் முதலானவற்றை அலசி ஆராய்ந்தார்.

உருவ வழிபாடு, அருவ வழிபாடு, வேள்வி, யாகம் என அனைத்தையும் புரிந்து கொள்ள அவற்றில் பல வழிகள் கூறப்பட்டிருந்தன.

ஜென் தத்துவம் பற்றியும் எதிலும் சரியான வகையில் விளக்கப்பட்டிருக்கவில்லை.

அதனால்- ஜென் குரு ஒருவரை நாடி விளக்கம் பெறவேண்டும் என்று அந்த பிரபு முடிவு செய்தார்.

பலரிடம் தீர விசாரித்த பிறகு, இவரே தனக்கு விளக்கம் கூறத் தகுதியுடைவர் என்று எண்ணி ஜென் குரு ஒருவரிடம் சென்றார்.



பிரபு அந்த ஜென் குருவைப் பணிந்து வணங்கி, "குருவே" எனக்கு ஜென் தத்துவம் புரியவில்லை. அதற்கான விளக்கத்தை அறிந்திட ஆவல் கொண்டவனாய் உள்ளேன். அதனால் தாங்கள் ஜென் தத்துவம் பற்றி விளக்கமாக எனக்கு உரைத்தருள வேண்டும்." என்று வேண்டினார்.

குரு தன்னிடம் விளக்கம் பெற வந்த பிரபுவிடம், “ஜென் தத்துவம் என்ன கூறுகிறது தெரியுமா?” என்று தொடங்கியவர்...

சற்று பொறு. போய் சிறுநீர் கழித்துவிட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு உட்புறம் சென்று விட்டார்.

பிரபுவுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

“என்ன இது? இந்த குருவைப் பற்றி எவ்வளவு பிரமாதமாகக் கேள்விப் பட்டோம்.? இவரிடமிருந்து எவ்வளவு பெரிய விளக்கத்தை எதிர்பார்த்தோம். இவர் கிராமப்புறத்து விவசாயியைப் போன்று சர்வ சாதரணமாகச் சிறுநீர் கழித்துவிட்டு வருவதாக சொல்லி விட்டுச் சென்று விட்டாரே!” என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும் அதனை வெளிக் காட்டாது குருவுக்காகக் காத்திருந்தார்.

சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்த குரு “புரிந்ததா?” என்பது போல் தலையை அசைத்துப் பிரபுவிடம் வினவினார்.

பிரபு, ஒன்றும் தெரியாமல் விழித்தார்.

அப்போது “எவனாக இருந்தாலும் நான் உட்பட, சிறுநீர் கழிக்காமல் இருக்க முடியுமா? அதைச் செய்துதானே தீர வேண்டும்? அதையும் நான்தானே கழித்தாக வேண்டும்.” எனக்குப் பதிலாக அதற்கு உன்னை, என்னால் அனுப்ப முடியுமா?” என்று கேட்டார்.

குரு கூறியதைக் கேட்டதுமே அந்த பிரபுவுக்கு ஞானம் பிறந்தது.

“அவரவர் வாழ்வு என்பது அவரவர் கையில் தான் உள்ளது. அதனை எக்காரணம் கொண்டும் எவரிடமும் தள்ளி விடவும் முடியாது” என்னும் உண்மையைப் பிரபு உணர்ந்து கொண்டார்.

“அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி

நவமாய செஞ்சடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (திருவா.பா.238)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 14. சீடனும் குருவும்
## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குருவின் சீடர்கள் சைக்கிளில் சென்று திரும்புவதை கண்டு "ஏன் நீங்கள் சைக்கிள்களில் சவாரி செய்கிறீர்கள்?" என்று விசாரித்தார் குரு

அதற்கு ஐந்து பேரும் வெவ்வேறு பதிலை குருவிடம் சொன்னார்கள்.

அதில் முதல் சீடன் "நான் வாங்கி வரும் உருளைக் கிழங்குகளை கையிலோ முதுகிலோ சுமப்பதை காட்டிலும், சைக்கிளில் அதன் கூடையில் வைத்து வருவது சுலபம் என நினைத்து, மேலும் நான் சைக்கிள் ஓட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குருவிடம் சொன்னான்.

அதற்கு குரு அவனிடம் "நீ மிகவும் சுறு சுறுப்பானவன், நீ வயதான பின் என்னை போலவே கூன் போடா மாட்டாய்" என்றார்.

இரண்டாவது சீடன் குருவிடம் "நான் இயற்கையை ரசிக்க சைக்கிள் சவாரி செய்தேன்" என்றான்.

குருவும் அதற்கு "உன் கண்கள் திறந்துள்ளது, அதனால் நீ உலகத்தை காண்கிறாய்" என்றார்.

பின் மூன்றாவது சீடன் "நான் என் சைக்கிள் சவாரி செய்யும் போது மந்திரத்தை ஓதிக் கொண்டே சென்றேன்" என்றான்.

அதற்கு குரு மூன்றாவது சீடனை "உனது மனதில் எண்ணங்கள் எளிதாக, புதிய சக்கரங்கள் போல சுழலும்" என்று பாராட்டினார்.

பின்னர் நான்காவது சீடன் “நான் எல்லா உயிரினங்களின் நல்லிணக்கத்தில் வாழ ஆசை கொண்டு சைக்கிளில் சவாரி செய்தேன்” என்றான்.

குருவும் அதற்கு அவனிடம் “நீ தீங்கு இல்லாத ஒரு தங்கமான பயணத்தை மேற்கொள்கிறாய்” என்று மகிழ்ந்து கூறினார்.

பிறகு ஐந்தாவது சீடன் குருவிடம் “நான் சைக்கிள் சவாரி செய்வதற்காக, என் சைக்கிளில் நான் சவாரி செய்தேன்” என்றான்.

அதற்கு குரு, அந்த சீடனின் முன் வணங்கி 'நான் உங்கள் சீடனாவேன்' என்று கூறினார்.

ஏனெனில் இந்த நான்கு சீடர்களும், குருவிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று எண்ணி, மனதில் இருக்கும் உண்மையை மறைத்து, வித்தியாசமாக பதிலை அளித்தார்கள்.

ஆனால் கடைசியில் சொன்ன சீடன் “சைக்கிளில் எதற்கு சென்றாய் என்று கேட்டதற்கு, அவன் சவாரி செய்வதற்காக சென்றேன்” என்று

மனதில் இருக்கும் உண்மையை கூறியதால், குரு அவருடைய சீடனுக்கு சீடனாக ஆனார்.

எண்ணத்தை தூய்மையாக வைத்திருந்தால் எண்ணம் எல்லாம் நற் பயனாக மாறும். உண்மையைத் தவிர வேறு எந்த எண்ணமும் மனதில் உதிக்காது.

“யாமார்க்கும் குடிஅல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன்அடியார் அடியா
ரோடு
மேன்மேலும் குடைந்துஆடி ஆடு வோமே” (திருவாச.பா.34)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


# 15. வழியும் கோப்பை
## (ஜென்னும் திருவாசகமும்)

நான்-இன் என்ற ஜப்பானிய ஜென் ஆசிரியர் வாழ்ந்த காலம் 18 ஆம் நூற்றாண்டாகும்.

அக்காலத்தில் பிரபலமான ஒரு பல்கலைக் கழத்திலிருந்து ஒரு பேராசிரியர் ஒருவர் நான்.இன் அவர்களைக் காண வந்தார்.

வந்தவரை சம்பிராதப்படி வரவேற்று உபசரித்து கருத்து பரிமாற்றம் செய்து கொண்டிருந்தனர்.

நான்.இன் அவர்கள் பேச்சின் நடுவே தேநீர் வழங்க ஆரம்பித்தார். பேச்சின் ஒரு கட்டத்தில், பேராசிரியர்- தான் ஜென் குறித்து கற்க விரும்புவதாகக் கூறினார்.



கெட்டிலில் இருந்து பேராசிரியரின் கோப்பையில் தேநீர் ஊற்றத் தொடங்கிய ஜென் ஆசிரியர், கோப்பை நிரம்பி வழிந்த போதும் கூட -ஊற்றுவதை நிறுத்தவில்லை. மிகுந்த தேநீர் வழிந்தோடி வீணானது.

இதுகண்டு பேராசிரியர், ஐயா தேநீர் வீணாகிறது. ஊற்றுவதை நிறுத்தும் என்றார்.

நான்.இன் அவர்கள் சொன்னார்.

ஐயா உங்கள் மனநிலை இந்தக் கோப்பையைப் போன்றது. உங்கள் சிந்தனை பதிந்து போன நம்பிக்கைகள், காலம் காலமாய் வளர்ந்துவிட்ட ஊகங்கள் ஆகியவற்றால் நிரம்பியுள்ளது.

நிரம்பிய கோப்பையில் ஊற்றிய தேநீர் வழிந்தோடி வீணாவதைப் போல், இப்போது எந்தப் புதிய அறிவும் உங்களுக்குப் பயன்படாது.

உம்முடைய எண்ணம் என்ற கோப்பையை காலி செய்து கொண்டு வாரும் என்று கூறி அனுப்பினார்.

“செய்த பிழைஅறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்புஅறியேன் – வையத்து
இருந்து உறையுள் வேல்மடுத்துஎன் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்.” (திருவாச.திருவெண்பா. பா.619)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 16. பிறப்பு அறுக்கும் பேராளன்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு பெரிய பணக்காரன் ஒருவன் ஜென் துறவியை சந்தித்து, “நான் என் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை நினைவூட்டும் வகையில் ஏதாவது எழுதிக் கொடுங்கள்” என்று கேட்டான்.

அதற்கு அந்த மாஸ்டர் ஒரு காகிதத் துண்டை எடுத்து, அதில் “தந்தை இறக்கிறான், மகன் இறக்கிறான், பேரன் இறக்கிறான்” என்று எழுதிக் கொடுத்தார்.



அதைப் படித்த அவனுக்கு ஒரே கோபம் மூண்டது.

"என்ன? நான் உங்களிடம் என்னை ஊக்குவிக்கும் வகையிலும், என் வருங்கால சந்ததியினர் அதைப் படித்து வாழ்க்கையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு கேட்டால், நீங்கள் என் மனம் புண்படும் வகையில் எழுதித் தருகிறீர்களே!" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி "ஆமாம். நானும் நீ கேட்டது போல் உன் குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்த ஒரு மகிழ்ச்சியான ஒன்றைத் தான் எழுதியுள்ளேன்.

எப்படியெனில், ஒரு வேளை உன் மகன் முதலில் இறந்து விட்டால், அது ஒவ்வொருவரின் மனதிலும் பெரும் வலியை உண்டாக்கும்.

அதுவே உன் பேரன் முதலில் இறந்தால், அது தாங்க முடியாத அனுபவமாக இருக்கும்.

எப்படியிருந்தாலும் உங்கள் குடும்பத்தில் இருப்பவர்கள் வரிசையாக இறக்கப் போகிறார்கள். அது தான் வாழ்க்கைப் பற்றிய இயற்கையின் உண்மை.

ஆகவே நானும் அதை, அந்த காகிதத்தில் எழுதியுள்ளேன். எப்படியிருப்பினும் இந்த உலகில் பிறக்கும் அனைவருக்குமே வலி நிச்சயம் இருக்கும். அதையே சந்ததியினரும் பின்பற்றுவர்.

ஆகவே இந்த காகிதத்தில் இருப்பது எப்போதும் அழியாததாய் இருக்கும்" என்று விளக்கினார்.

## பிறப்புத் துன்பத்தை போக்கும் மருந்து  திருவாசகம்

"முன்னை வினைஇரண்டும் வேரறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்பு அறுக்கும், பேராளன் – தென்னன்

பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வரும்துயரம் தீர்க்கும் மருந்து"    (திருவாச.திருவெண்பா. பா.620)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17.மனத்திண்மை (வில் பவர்)

## (ஜென்னும் திருவாசகமும்)

தனது தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார் அந்த ஜென் குரு.

அவரின் சீடர் அவரருகே வந்து தயங்கி நின்றார்.

என்னப்பா விஷயம்?"

"ஒரு சந்தேகம் குருவே"

"என்ன சந்தேகம்?"



"நீங்கள் தோட்டத்தில் உலவும்போது எந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பீர்கள்?"

"சீடனே நான் சிந்தனையைத் தாண்டிய விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பேன்" புன்னகைத்தபடியே கூறினார் குரு.

"அதை எப்படி குருவே சிந்திக்க முடியும்?" சீடன் புரியாமல் கேட்டான்.

“அது ரொம்ப சுலபம். சிந்தனையை வெட்டி எறிந்துவிடு. அது போதும்” பதிலளித்த குரு மீண்டும் தோட்டத்தில் நடக்கத் தொடங்கினார்.

“மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை ஆடுகுழல் போலகரந்து பரந்ததுஉள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே”
(திருவா.பா.415)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 18. மனத்தூய்மை வேண்டும்
## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குருவின் ஆசிரமத்திற்கு ஒரு இளைஞன் வந்தான்.

குருவைப் பணிந்து வணங்கிய அவன் “குருவே நான் என் மனதால்கூட எந்தத் தவறும் செய்வதில்லை. பிறருக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்கிறேன். எந்த விதமான கெடுதலும் செய்ததில்லை. மனதைத் தூய்மையாக வைத்துள்ள எனக்கு உங்களுடைய உபதேசம் தேவையா?” என்று கேட்டான்.

அவன் கூறியதைக் கேட்ட குரு, “நீ எந்த ஒரு வேலையும் செய்யாமல் ஒரு இடத்தில் அமைதியாக இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் பின்னர் என்னிடம் வா” என்று அவனை அனுப்பி வைத்தார்.




இரண்டு நாட்களுக்குப் பின்னர் திரும்பி வந்தான்.

“உன் ஆடைகளைப் பார், எவ்வளவு அழுக்காக இருக்கிறது. நீ எங்கும் செல்லாமல் ஓரிடத்தில் சும்மா உட்கார்ந்திருந்த போதே இவ்வளவு அழுக்கு சேர்ந்திருக்கிறது என்றால் அலைந்து திரியும் மனதில் எவ்வளவு அழுக்குச் சேரும். நல்ல எண்ணங்களை மனதில் நிரப்பிப் கொண்டே இருந்தால்தான் மனம் சுத்தமாகும். அதைத்தான் நான் என் உபதேசத்தின் மூலம் சொல்கிறேன்”

## மனத்தூய்மை வினைத்தூய்மை வேண்டும்

“வைத்தநிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கு சென்றுஊதாய் கோத்தும்பீ”
(திருவா.திருக்கோத்தும்பி. பா.250)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19. கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
## (ஜென்னும் திருவாசகமும்)

புத்தரின் தலைமை மடாலயத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவம். அடிப்படை சந்நியாஸப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த துறவிகள், தியானத்தை மக்களுக்குக் கற்றுத்தந்து, மக்கள் முன்னேற்றம் பெறுவதற்காக நாடு முழுவதும் சேவைக்காக புறப்படும் நேரம் வந்தது.

அதில் பூர்ணகாஷ்யபா எனும் துறவிக்கு மட்டும் எங்கு செல்வது என்று சொல்லப்படவில்லை.

பூர்ணகாஷ்யபா நேரடியாய் புத்தரிடமே சென்று கேட்டார், ""நான் எங்கு செல்லட்டும்?"

புத்தர் சிரித்தபடி சொன்னார், "நீயே தேர்வு செய்யப்பா."
இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தான் செல்ல விரும்புவதாக சொன்னார்.

சீடனைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டவராய் புத்தர் கேட்டார்,

"அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் மிகவும் முரடர்கள். சின்ன சின்ன பிரச்னைக்கெல்லாம் அடிதடி சண்டையில் இறங்குபவர்கள், கொஞ்சம் கூட பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவர்கள். இப்படி பொல்லாதவர்களிடமா போக விரும்புகிறாய்?"

"ஆமாம்" என்று தைரியத்தோடு சொன்ன சீடனிடம் புத்தர் சொன்னார்...

"உன்னிடம் மூன்று கேள்விகளை கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று கேள்விக்கும் சரியான பதில் சொல்லிவிட்டால் நீ போகலாம்."

"ம்..."

"முதல் கேள்வி, அங்கே சென்ற பிறகு உன்னை வரவேற்பதற்கு பதில் அவமானப்படுத்தினால் என்ன செய்வாய்?"

"ரொம்ப ஆனந்தப்படுவேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்கவில்லை; உதைக்கவில்லை. திட்டுவதோடு நிறுத்திக்

கொண்டார்களே; மிகவும் நல்லவர்கள்... என்று நன்றி சொல்வேன்."

"இரண்டாவது கேள்வி. ஒருவேளை திட்டாமல் அடித்து உதைத்தால் என்ன செய்வாய்?"

"அவர்கள் மிகவும் நல்லவர்கள். அதனால்தான் என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். வெறுமனே அடித்ததோடு நிறுத்திக் கொண்டார்களே! என ஆனந்தப்படுவேன்."

"மூன்றாவது கேள்வி. ஒருவேளை உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?"

"ஆஹா இன்னும் ஆனந்தப்படுவேன். மொத்தமாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு சுதந்திரம் தந்துவிட்டார்கள். இனி எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று மிகவும் ஆனந்தப்படுவேன்" என்று சொன்னதும்,

"நன்றாக தேறிவிட்டாய். அங்கு மட்டுமல்ல எங்கு சென்றாலும் நீ வாழ்ந்து விடுவாய். எதனாலும் இனி உன்னை வீழ்த்தமுடியாது.




எப்போதும் ஆனந்தமாயிருக்க பக்குவப்பட்டுவிட்டாய். எங்கு சென்றாலும் நல்லாயிருப்பாயப்பா. போய் வா" என்று ஆசிர்வதித்து அனுப்பினார் புத்தர்.

அஞ்ஞாமை வேண்டும் – திருவாசகம்

"கோண் இலா வாழி அஞ்சேன்
  கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள் நிலா அணியி னானை
  நினைந்து நைந்து உருகி நெக்கு
வாழ் நிலாம் கண்கள் சோர
  வாழ்த்தி நின்று ஏத்த மாட்டா
ஆண் அலாதவரைக் கண்டால்
  அம்ம! நாம் அஞ்சு மாறே."

(திருவாசகம். பா.525)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 20. ஆணவம் நீங்கிய அமைச்சர்
## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு நாட்டின் தலைமை அமைச்சராக, டாங் பரம்பரை யைச் சேர்ந்த ஒருவர் இருந்தார்.


அவர் ஆட்சியை நன் முறையில் நடத்துவதில் மிகவும் சிறந்தவர்.

அவருக்கு புகழ், அதிகாரம் மற்றும் செல்வங்கள் இருப்பினும், புத்த சமயக் கருத்துகள் பற்றி அறிவதில் ஆர்வமுள்ளவராக இருந்தார்.

அதற்காக, அந்த ஊரில் இருக்கும் ஒரு ஜென் குருவிடம் அடிக்கடி சென்று கற்றுக் கொண்டார்.

அவ்வாறு கற்கும் அவர், தான் ஓர் அமைச்சர் என்ற எந்த ஒரு அகங்காரமும் இல்லாமல், ஓர் உண்மையான சீடன் போல நன்கு கற்று வந்தார்.

ஒரு நாள் அந்த அமைச்சர், ஜென் குருவிடம், “புத்த சமயத்தின்படி, ஆணவம் என்றால் என்ன?” என்று கேட்டார்.




அதைக் கேட்டதும், குருவின் முகம் சிவந்தது. பின் குரு கோபமாகத் தனது குரலை சற்று உயர்த்தி, “என்ன முட்டாள்தனமான கேள்வி இது?” என்று கேட்டார்.

இந்த மறுமொழியை எதிர்பாராத அந்த அமைச்சருக்கும் கோபமும், அதிர்ச்சியும் ஏற்பட்டன.

பின் குரு சிரித்துக் கொண்டே, “இதுதான் உண்மையான ஆணவம்” என்றார்.

இதுவரை குருவிடம் கோபம் கொள்ளாத சீடனாக இருந்த அமைச்சருக்கு, குரு கோபப்பட்டு பேசியதைக் கேட்டதும், ‘நான் ஒரு நாட்டின் அமைச்சர், என்னைப் பார்த்து எப்படி கோபத் தோடு பேசலாம்’ என்று எண்ணியபோது, தன்னுள் எழும்பிய கோபமே, உண்மையான ஆணவம் என்பது நன்கு புரிந்தது.

“குலம் களைத்தாய் களைந்தாய் என்னைக்
குற்றம் கொற்றச்சிலையாம்
விலங்கல் எந்தாய் விட்டிடுதிகண்
டாய் பொன்னின் மின்னுக்கொன்றை
அலங்கல்அம் தாமரை மேனிஅப்

பாஒப்பு இலாதவனே
மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயி
ரிலயொரு மத்துஉறவே" (திருவா.நீத்தல் விண்ணப்பம்.பா.133)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 21.பழக்கமே பற்றாக!

## (ஜென்னும் திருவாசகமும்)

எகி புத்தர் கோயிலில், ஜென் குருவாக கிடானோ கெம்போ என்பவர் இருந்தார்.

தொண்ணூற்று இரண்டு வயது வரை வாழ்ந்தவர் அவர்.

வாழ்நாள் முழுவதும் எந்தப் பொருளிலும் அவர் பற்று வைத்தது இல்லை.

துறவியான அவர் இருபதாவது வயதில் இருந்து ஒவ்வொரு ஊராகத் திரிந்து கொண்டிருந்தார்.

அப்போது வழிப்போக்கர் ஒருவரைச் சந்தித்தார். அந்த வழிப்போக்கர் புகை பிடிக்கும் பழக்கம் உடையவர்.

இருவரும் மலைப் பாதை வழியாகச் சென்று கொண்ருந்தார்கள்.

களைப்பு அடைந்ததால் அவர்கள் இருவரும் அங்கிருந்த மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள்.



அந்த வழிப்போக்கர் "நீங்களும் புகைத்துப் பாருங்கள் என்றபடி புகை போக்கியை அவரிடம் தந்தார்.

பசியுடன் இருந்த கின்டோ அவர்கள் புகை போக்கியை வாங்கிப் புகை பிடித்தார்.

"ஆ! புகை பிடிப்பது எவ்வளவு இனிமையாக உள்ளது?" என்றபடியே புகை போக்கியைத் திரும்பித் தந்தார்.

இதைக் கேட்ட வழிப்போக்கர் புகை போக்கியை மீண்டும் அவரிடம் தந்தார். "இன்னும் சிறிது புகையுங்கள்" என்றார்.

"இப்படிப்பட்ட மகிழ்ச்சியான செயல் தியானத்திற்கு இடையூறாக இருக்கும். இந்தப் பழகத்திற்கு அடிமையாவதற்கு முன் பழக்கத்தைவிட வேண்டும்" என்று நினைத்தார்.

அவர் தந்த புகை போக்கியை வீசி எறிந்தார்.

பந்தபாசம் அற்ற வாழ்வு - திருவாசகம்

"மாறி நின்று எனை கெடக்கிடந்
　　தனையை எம்மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றலம் இனிஉனைச்
　　சிக்கெனச் சிவன் அவன் திரள் தோள்மேல்
நீறு நின்றது கண்டனை
　　ஆயினும் நெக்கிலை இக்காயம்
கீற கின்றலை கெடுவதுஉன்
　　பரசுஇது கேட்கவும் கில்லேன்" (திருவா.ஆத்தும சுத்தி.பா.37)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22. மனம் ஒரு பொக்கிஷம்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஓர் ஊரில் ஒருவன் நன்கு வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தான். அப்போது அந்த ஊரில் பொக்கிஷம் இருக்கும் இடத்தைப் பற்றிய வதந்தி பரவிக் கொண்டிருந்தது.

ஆகவே அந்த ஊரில் உள்ளவர்கள், பாலைவனத்தில் நின்று தூரத்தில் இருக்கும் மலையை பார்த்து நிற்கும் போது, நமது நிழல் விழும் இடத்தில் பொக்கிஷம் இருப்பதாக பேசிக் கொண்டனர்.

இதனைக் கேட்ட அவன், உடனே வியாபாரத்தை விட்டு, பொக்கிஷத்தை தேட பாலைவனத்திற்கு மறுநாள் காலையிலேயே சென்று, தூரத்தில் இருக்கும் மலையைப் பார்த்து நின்று, அவன் நிழல் விழம் இடத்தில் குழியைத் தோண்ட ஆரம்பித்தான்.

அதுவரை வியாபாரத்தின் மீது முழு கவனம் செலுத்திய அவன் பொக்கிஷத்தின் மீது கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

பொக்கிஷத்தைப் பெறுவதற்காக காலையில் இருந்து நிழல் விழுந்த இடத்தில் தோண்டிக் கொண்டிருந்தவனது நிழல், மாலையில் காலடிக்குள் வந்து விட்டது.

அதனால் ஏமாற்றமடைந்த அவன் அழுது புலம்பிக் கொண்டு இருந்தான்.

அப்போது அந்த வழியாக வந்த ஜென் துறவி ஒருவர், அவனது செயலைக் கண்டு சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்தார்.

பின் அவனிடம் "இப்போது தான் உன் நிழல் பொக்கிஷம் உள்ள இடத்தை சரியாக காட்டுகிறது. அதுவும் அந்த பொக்கிஷம் வேறு

எங்கும் இல்லை, உன்னுள் தான் உள்ளது” என்று சொல்லிச் சென்றார்.

“அறிவி லாத எனைப் புகுந்து
ஆண்டு கொண்டு அறிவதை அருளிமேல்
நெறி எலாம் புலம் ஆக்கிய
எந்தையைப் பந்தனை அறுப்பானைப்
பிறிவிலாத இன்னருள்கள் பெற்று
இருந்தும் மாறாடுதி பிணநெஞ்சே
கிறியெலாம் மிகக்கீழ்ப படுத்தாய்
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே” <u>(திருவா.ஆத்தும சுத்தி.பா.36)</u>

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 23.<u>தவமே புரிந்திலன்</u>

## (ஜென்னும் திருவாசகமும்)

சீஜோ என்ற ஜென் குருவிடம் ஒரு துறவி. “நம்முடைய எழுதப்பட்ட வரலாற்றுக்கு முன்பு உள்ள ஒரு புத்தர், தியானத்தில் அமர்ந்து பத்துப் பிறவிகள் எடுத்தும், அந்த மேலான உண்மை நிலையில் விளக்கம் பெறவில்லை என்று நான் கேள்விப்பட்டேன்.

ஆகவே, அவரால் ஒரு முழுமையான புத்தராக முடியவில்லை. ஏன் அப்படி? என்று கேள்வி கேட்டார்.

அதற்கு சீஜோ, “உன்னுடைய கேள்வியிலேயே விளக்கம் இருக்கிறது”

துறவி, “அவர் தியானம் செய்து கொண்டிருந்தாலும், ஏன் அவரால் புத்தத் தன்மையை முழுமையாக அடைய முடியவில்லை?”

சீஜோ, “ஏன் என்றால், அவர் ஒரு புத்தராக இல்லை” என்றார்.



தியானம் செய்பவர்கள் மனதை வெறுமையாக்கிக் கொண்டு வரும் போதே, ஒரு கட்டத்தில் தியானத்தையே விட்டுவிட்டு, உடலாலும், மனதாலும் முழு ஓய்வில் இருக்க வேண்டும்.

ஜெ.கிருஷ்ணமூர்த்தி "தியானம் தேவையே இல்லை" என்கிறார். அது தியானத்தில் ஆழ்ந்து சென்றவர்களுக்குத்தான் பொருந்தும்.

"தவமே புரிந்திலன் தண்மலர்
    இட்டுமட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
    உனக்கு அன்பர் உன்னால்
சிவமே பெறும்திரு எய்திற்று
    இலேன்நின் திருவடிக்காம்
பவமே அருளுகண்டாய் அடியேற்கு
    எம்பரம பரவே."     (திருவாசகம்.மெய்யுணர்தல்.பா.9)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 24.ஞானியின் ஆசை என்ன?

### (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குரு, தைகான் ஒரு நாள் இரவு தம் அறையில் அமர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

திருடன் ஒருவன் கத்தியுடன் உள்ளே நுழைந்ததைப் பார்த்துவிட்ட குரு கேட்டார்.

“உனக்கு என்னப்பா வேண்டும்? உயிரா? பணமா?”

திருடன் திகைத்துப் போனான். திருடன், மிரட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது பற்றி ஏமாற்றம் அடைந்தான்.

“நான் பணத்திற்காகத்தான் வந்தேன்!” என்றான் திருடன், மெல்ல.



”சரி, அதை வந்ததும் சொல்ல வேண்டியது தானே!”என்று சொல்லி அவனுக்குக் கணிசமான அளவு பணம் கொடுத்துவிட்டு அமைதியாகக் கடிதம் எழுத ஆரம்பித்தார்.

திருடனுக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. குருவின் அமைதி அவனை ஏதோ செய்தது.

கையில் பணத்துடன் வெளியே போகத் திரும்பினான் திருடன்.

“தம்பி, போகும்போது கதவைச் சாத்திவிட்டுப் போ!” என்றார் குரு, கடிதம் எழுதியபடியே.

திருடன் ஒரு கணம் அவரைத் திரும்பிப் பார்த்து மெல்லக் கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.

சில நாட்களில் அவன் பிடிபட்டான். காவலரிடம் அவன் இப்படிச் சொன்னான்,

நான் நீண்ட நாளாகத் திருட்டுத் தொழில் செய்கிறேன். ஆனால் அந்த குரு மாதிரி ஆளை நான் பார்த்ததே இல்லை. அவர் ரொம்ப பயங்கரமானவர். கத்தியைத் தூக்கிக் காட்டுவதற்கு முன்பே, “உனக்கு என்ன வேணும்?” என்று கேட்டார்.

பணத்தைத் தைரியமாகத் தந்தார். நான் பயந்து போய்விட்டேன். ஐயா, நான் சிறைவாசம் முடிந்தவுடன் தைரியத்தைக் கற்றுக் கொள்ள அவரிடம்தான் போகப் போகிறேன்" என்றான்.

ஞானிக்கு என்ன ஆசை? திருவாசகம்

"அளிபுண் அகத்துப் புறந்தோல்
    மூடி அடியேனுடை யாக்கை
புளியம்பழம் ஒத்து இருந்தேன்
    இருந்தும் விடையாய் பொடிஆடீ
எளிவந்து என்னை ஆண்டு
    கொண்ட என்ஆர் அமுதேயோ
அளியேன் என்ன ஆசைப்
    பட்டேன் கண்டாய் அம்மானே" (திருவாசகம்.பா.421)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 25.முழு விழிப்புணர்ச்சி!

(ஜென்னும் திருவாசகமும்)

பத்து வருடகாலக் கடினப் பயிற்சிக்குப் பின்னர் டெனோ ஒரு ஜென் குருவாக ஆனார்.

புகழ்பெற்ற மாஸ்டரான நான்–இன்-ஐப் பார்க்க அவர் சென்றார். நான் இன், சீடரான டெனோவை வரவேற்றார்.

பிறகு கேட்டார்: "டெனோ! உன்னுடைய கட்டை மிதியடியையும் குடையையும் மடாலய வாசலில் விட்டு வந்தாயா?"

"ஆமாம்! குருவே" என்றார் டெனோ.

“டெனோ! உனது குடையை மிதியடியின் இடது பக்கம் வைத்தாயா அல்லது வலது பக்கம் வைத்தாயா? சொல்லேன்!” என்று கேட்டார் மாஸ்டர்.

டெனோவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. தனக்கு இன்னும் முழுமையான விழிப்புணர்ச்சி வரவில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

ஆகவே, மீண்டும் பயிற்சிக்குத் தயாரானார்.

நான்–இன் கீழ் இன்னொரு பத்து ஆண்டுக் காலம் பயிற்சியை மேற்கொண்டார் டெனோ!

“வேண்டத் தக்க தறிவோய்நீ
 வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
 வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
 யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
 அதுவும் உன்றன் விருப்பன்றே.” (திருவாசகம் பா.501)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 26. வாழ்ந்தார்கள் ஆவாரும்

(ஜென்னும் திருவாசகமும்)

ஜென் துறவி தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், அவர்களிடம் “ஒருவருடைய நல்ல வாழ்க்கையின் ஆயுட்காலம் என்ன?” என்று கேட்டார்.

அதற்கு சீடர்களுள் ஒருவன் “வேறு எத்தனை நூறு வயது தான்” என்று கூறினான். குருவோ, “இல்லை” என்றார்.

“அப்படியெனில், 90 வயது” என்று மற்றவன் கூறினான்.
அதற்கும் “இல்லை” என்று குரு கூறினார்.

அப்படியே சீடர்கள், 80? 70? என்று சொல்ல, அதற்கும் மறுத்தார்.

பின் அவர்கள் பொறுமையிழந்து “வேறு என்னவென்று நீங்களே சொல்லுங்கள்” என்று கூறினர்.

அதற்கு குரு “ஒரு வினாடி தான்” என்று கூறினார்.

“அது எப்படி ஒரு வினாடியில் நல்ல வாழ்க்கையை வாழ்ந்ததாக சொல்ல முடியும்?” என்று அனைவரும் கேட்டனர்.

பின் குரு “நல்ல வாழ்க்கை என்பது ஒரு வினாடியில் தான் தெரியும். எப்படியெனில் ஒவ்வொரு வினாடியையும், வாழ்க்கையின் தொடக்கமாக நினைக்க வேண்டும்.

மேலும் அதையே முடிவு என்றும் நினைக்க வேண்டும். அதிலும் அந்த வினாடியில் எந்த ஒரு பழையதையோ அல்லது வருங்காலத்தையோ நினைத்து வாழக்கூடாது.

ஒரு வினாடி பிறக்கிறதென்றால், அதை முழுமையாக அனுபவிக்க வேண்டும். அது தான் உண்மையான நல்ல வாழ்க்கை” என்று சீடர்களுக்கு சொல்லி, உண்மையான வாழ்க்கையின் தத்துவத்தைப் புரிய வைத்தார்.

## வாழ்ந்தவர்கள் ஆவார்கள் – திருவாசகம்

“வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்து உலகம் ஏத்தத் தகுவாரும் – சூழ்ந்துஅமரர்
சென்று இறைஞ்சி ஏத்தும் ----------......” (திருவா.பா.630)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 27.இன்னும் செத்திலேன்

## (ஜென்னும் திருவாசகமும்)


புத்தர் தன் கடைசி நேரத்தில் கூறினார்.

என் உடலை இயற்கைக்கு மீண்டும் ஒப்படைக்கப் போகிறேன்.
நான் அனேக உடல்களை பயன் படுத்தி உள்ளேன்.

ஆனால் இதற்கு முன்பு இயற்கைக்கு நன்றி சொல்லியது இல்லை இதுதான் கடைசி.

இனி நான் உடலுக்குள் புக மாட்டேன்.
இதுதான் நான் வாழ்கின்ற கடைசி வீடு கடைசி இருப்பிடம்.

நான் என் உடலைத் திருப்பித் தர வேண்டும்.
இது அனேக வேலைகளைச் செய்து விட்டது.




இது என்னை ஞானத்திற்கு இட்டுச் சென்றது.
இது நல்ல சாதனமாக இருந்தது.
இது எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந்தது.

ஆகவே இயற்கைக்கு நன்றி சொல்லி விட்டு
இந்த வீட்டை திருப்பி கொடுக்க வேண்டும்.

ஏனெனில்

இந்த உடல் இயற்கை எனக்கு கொடுத்த வெகுமதி.
நான் முழு உணர்வுடன் இதைக் கொடுக்க வேண்டும்.

அதன் பிறகு அவர் தன் உடலை ஒப்படைத்தார்.
அவர் உடலைச் சுற்றி ஒரு ஒளி இருந்தது.
அவர் உடல் சக்தியாக மாறி இந்தப் பிரபஞ்சத்துடன் கலந்து விட்டது.

அவருடைய மரணம் உள்ளுணர்வுடன் கூடிய மரணம்.
பிறகு அவர் தனது மனதை ஒப்படைத்தார்.
அப்பொழுது நறுமணம் பரவியது.
புத்தரின் மனம் ஒரு நறுமணம்தான்.
கள்ளங் கபடமற்ற தூய்மையான வாழ்க்கையின் நறுமணம்.
பிறகு அவர் தன் ஆன்மாவை ஒப்படைத்தார்.

இந்த மூன்று விஷயங்களும் ஒப்படைக்கப் பட்ட பின்னரே அவர் இறந்தார்.
இதுதான் மகா பரி நிர்வாணம்
இதுதான் மகாசமாதி.✨

“பொய்யனேன் அகம்நெகப் புகுந்து அமுது ஊறும்
புதுமலர்க் கழல் இணையடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்து இருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருப்பெரும் கடலே
அத்தனே அயன் மாற்கு அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே செய்வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.” (திருவாச.பா. 398)

பொய்யனாகிய என்னுடைய உள்ளத்தைக் குழைவித்து. உள்ளே புகுந்து, அமுதம் ஊறுமாறு செய்தவனின், புதுமலர் போன்ற இரண்டு திருவடிகளைப் பிரிந்த பின்னும் கடையவனாகிய நான், இன்னும் சாகாமல் உயிருடன் இருக்கிறேன்.

# ஜென்னும் திருவாசகமும் பாகம் 2

## Youtube Links

1. தவம் செய்தேன் https://youtu.be/UAklzONfPKI
2. உயிர் இரக்கம் https://youtu.be/6LgvNqohQyA
3. முக்திக்கு செல்லும் பாதை எது? https://youtu.be/fa9Opbr7aUY
4. அறிவனோ அல்லனோ https://youtu.be/No3JgrGyEaw
5. இன்பம் பெருக்கி இருள்அகற்றி https://youtu.be/VaX1MAeE9zA
6. பற்றைவிட வேண்டும் https://youtu.be/8whSo9BAC5E
7. முக்திநெறி அறியாத மூர்க்ரோடு
8. கருணைக் கடலின்உள்ளம் https://youtu.be/NIMJ1b5AGQw
9. யானே பொய் என் நெஞ்சும் பொய் https://youtu.be/F-RTLIUbi7g
10. பழுக்கும் ஞானம் https://youtu.be/q_2DcNo0inI
11. ஞானத்தின் நிலைகள் https://youtu.be/ZVElbjsRAi0
12. அபரஞானம் பரஞானமாக மாறிவிட்டது https://youtu.be/sZXcyHEr63o
13. ஞானம் யாரிடம் பெறுவது? https://youtu.be/kG5cUfw9iw0
14. சீடனும் குருவும் https://youtu.be/mW_qdfJ2TIs
15. வழியும் கோப்பை https://youtu.be/fiFjVAtfK30
16. பிறப்பு அறுக்கும் பேராளன் https://youtu.be/VBasU8FZ1o0
17. மனத்திண்மை (வில் பவர்) https://youtu.be/KhdKcv1AyNI
18. மனத்தூய்மை வேண்டும் https://youtu.be/kIXKXPeV1uM

19. கூற்றவன் சீற்றம் அஞ்சேன் https://youtu.be/I6fKHKHUTCQ

20. ஆணவம் நீங்கிய அமைச்சர் https://youtu.be/5CqL39v-LOI

21. பழக்கமே பற்றாக! https://youtu.be/UnYOcU0CEeU

22. மனம் ஒரு பொக்கிஷம் https://youtu.be/wxycfeA543A

23. தவமே புரிந்திலன் https://youtu.be/gZM_3C950tc

24 .ஞானியின் ஆசை என்ன? https://youtu.be/B0j93W_Ftq8

25. முழு விழிப்புணர்ச்சி! https://youtu.be/hUK1Pk7JYW0

26. வாழ்ந்தார்கள் ஆவாரும் https://youtu.be/vjCCs2hQjO0

27. இன்னும் செத்திலேன் https://youtu.be/z0J2s5ToPMw

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாணிக்கவாசகர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
6. 100 ஜென் கதைகள், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை
7. ஜென் கதைகள், எ.ஜோதி, நன்மொழிப் பதிப்பகம், சென்னை.
8. Zen Stick – karn Rahul - Kindly Store
9. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya
10. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.

11. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
12. இணையதள தகவல்கள்

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்

4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி

10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.

5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (**ஒப்பாய்வு**)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4

5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 125 தலைப்புகளில் vethathiriam Banukumar என்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து

30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3

65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு

100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120..வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123.வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125 அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்